பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

25 11 2025 6 45

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பிரதமர் திரு. நரேந்திர மோடி அயோத்தியில் ஸ்ரீ ராமஜென்ம பூமி கோயிலில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் இன்று பங்கேற்கிறார்.
- நாடு முழுவதும் நடப்பு ரபி பருவத்தில் இதுவரை 306 லட்சம் ஹெக்டேர் பரப்பளவிற்கு பயிர் நடவு செய்யப்பட்டுள்ளதாக மத்திய வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- தமிழகத்தில் கடலோரம் மற்றும் டெல்டா மாவட்டங்களில் இன்று கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளதை அடுத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாவட்ட நிர்வாகங்களுக்கு மாநில அரசு அறிவுறுத்தியுள்ளது.
- தமிழகத்திற்கு 16 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை மத்திய அரசு வழங்கியுள்ளதாக பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.
- Deaflympics போட்டியில் இந்தியாவின் Pranjali Prashanth Dhumal தங்கப் பதக்கம் வென்றார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

நாடு முழுவதும் நடப்பு ரபி பருவத்தில் இதுவரை 306 லட்சம் ஹெக்டேர் பரப்பளவிற்கு பயிர் நடவு செய்யப்பட்டுள்ளதாக மத்திய வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், 73 புள்ளி மூன்று ஆறு லட்சம் ஹெக்டேர் அளவிற்கு பருப்பு வகைகள் பயிரிடப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இது கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தைவிட அதிகம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுதானியங்கள் 19 புள்ளி ஆறு ஒன்பது லட்சம் ஹெக்டேர் பரப்பளவிற்கும், எண்ணெய்வித்துகள் 76 புள்ளி ஆறு நான்கு லட்சம் ஹெக்டேர் பரப்பளவிற்கும் பயிரிடப்பட்டுள்ளதாக வேளாண் அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

தென்காசி மாவட்டம் இடைக்கால் பகுதி அருகே நேரிட்ட சாலை விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், காயமடைந்தவர்கள் விரைவில் குணமடையும் வகையில் உயர்தர சிகிச்சையளிக்குமாறு அரசைக் கேட்டுக்கொள்வதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

தமிழகத்திற்கு 16 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை மத்திய அரசு வழங்கியுள்ளதாக பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

தேனி மாவட்டம் பங்களாமேடு பகுதியில் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், தேனி மாவட்டத்தில் மட்டும் 3 லட்சம் பேருக்கு ஜல்ஜீவன் திட்டத்தின்கீழ் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

தமிழக மக்கள் மீது திமுகவிற்கு எந்தவொரு அக்கறையும் கிடையாது என்று அவர் குற்றம் சாட்டினார்.

மாநிலத்தில் போதைப்பொருள் புழக்கம் அதிகரித்துள்ளதாகவும், பெண்களுக்கு பாதுகாப்பில்லை என்றும் திரு. நயினார் நாகேந்திரன் கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தில் கடலோரம் மற்றும் டெல்டா மாவட்டங்களில் இன்று கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளதை அடுத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாவட்ட நிர்வாகங்களுக்கு மாநில அரசு அறிவுறுத்தியுள்ளது.

வருவாய் நிர்வாக ஆணையர், மாநில நிவாரண ஆணையர் ஆகியோர் அவசர கால செயல்பாட்டு மையத்தில் இருந்து காணொலி காட்சி வாயிலாக தென்காசி, திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர்களுடன் பேரிடரை எதிர்கொள்வதற்கான முன்னெச்சரிக்கை மற்றும் ஆயத்த நிலை குறித்து ஆய்வு செய்தனர்.

மாநில பேரிடர் மீட்புப் படையினர் தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிக்காக தயார் நிலையில் உள்ளனர்.

தேசிய பேரிடர் மீட்புப் படை திருநெல்வேலி மாவட்டத்தில் நிறுத்தப்பட்டுள்ளனர்.

விழுப்புரம் மாவட்டத்தில் தேசிய பேரிடர் மீட்புப் படையினர் நாளை செல்ல உள்ளதாக மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதற்கிடையே தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக காரையாறு, சேர்வலாறு, மணிமுத்தாறு அணைகளில் இருந்து உபரி நீர் திறந்துவிடப்படுவதால் தாமிரபரணி

ஆற்றங்கரையோர கிராமங்களில் வசிக்கும் பொதுமக்கள் உள்ளிட்டோர் பாதுகாப்பாக இருக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

உலக மகளிர் கபடிக் கோப்பையை வென்ற இந்திய அணிக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், இந்திய அணி சிறப்பான மன உறுதியையும், திறமையையும், அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்தியுள்ளதாக கூறியுள்ளார்.

இந்த வெற்றியின் மூலம் நாடு பெருமைப்படுவதாகவும், கபடிப் போட்டியில் எண்ணற்ற இளைஞர்களுக்கு இது உத்வேகம் அளிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், தொடர்ந்து இரண்டாவது முறையாக இந்திய மகளிர் கபடி அணி உலகக் கோப்பையை வென்றிருப்பது நாட்டிற்கு பெருமித தருணம் என்று கூறியுள்ளார்.

சரியான ஆதரவும் முன்னேறுவதற்கான சூழலும் அமைந்தால், உலக அரங்கை தங்கள் வசமாக்க இயலும் என, மீண்டும் ஒருமுறை இந்தியாவின் மகள்கள் நிரூபித்துள்ளனர் என்று முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று அயோத்தியில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

அயோத்தி ஸ்ரீ ராமஜென்ம பூமி கோயிலின் கட்டுமானம் நிறைவடைந்ததையும், கலாச்சாரக் கொண்டாட்டம் மற்றும் நாட்டின் ஒற்றுமையின் ஒரு புதிய சகாப்தம் தொடங்கியுள்ளதைக் குறிக்கும் வகையிலும் அங்கு அவர் கொடியேற்றி உரையாற்றுகிறார்.

முன்னதாக மகரிஷிகளான வசிஷ்டர், விஸ்வாமித்ரர், அகத்தியர், வால்மீகி மற்றும் தேவி அஹில்யா, நிஷாத்ராஸ் குகன், அன்னை சபரி ஆகியோரின் கோவில்களில் பிரதமர் தரிசனம் செய்கிறார்.

அதைத் தொடர்ந்து அன்னை அன்னபூர்ணா தேவி கோவிலிலும் பின்னர் ராம்லல்லா கர்ப்பகிரகத்திலும் திரு. நரேந்தி மோடி தரிசனம் செய்ய உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**<<<<>>>>**

உலகக் கோப்பை ஜூனியர் ஹாக்கிப் போட்டி சென்னை மற்றும் மதுரையில் நடைபெற உள்ள நிலையில், அந்த கோப்பை மாநிலம் முழுவதும் எடுத்துச் சென்று அறிமுகப்படுத்தப்பட்டு வருகிறது.

நேற்று ராணிப்பேட்டை மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாநில கைத்தறித்துறை அமைச்சர் திரு. காந்தி, உலகக் கோப்பையை அறிமுகப்படுத்தினார்.

இதற்கிடையே இப்போட்டியில் பங்கேற்கும் இங்கிலாந்து. நெதர்லாந்து, தென்னாப்பிரிக்கா, நமீபியா நாடுகளைச் சேர்ந்த அணியினர் சென்னையில் இருந்து நேற்று மதுரை விமான நிலையம் வந்தடைந்தனர்.

விமான நிலையத்தில் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

## *இருவரிச் செய்திகள்*

இந்தியா - ஆஃப்கனிஸ்தான் இடையே ஜவுளித்துறையில் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்து புதுதில்லியில் ஆலோசிக்கப்பட்டது.

<<<<>>>>

நேபாள் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில், சூதாட்டத்தில் ஈடுபட்டதாக இந்தியர்கள் உட்பட 10 பேரை அந்நாட்டு காவல்துறையினர் கைது செய்தனர்.

<<<<>>>>

சத்தீஸ்கட் மாநிலம் சுக்மா மாவட்டத்தில் 15 நக்சலைட்கள் காவல்துறையினரிடம் சரணடைந்தனர்.

<<<<>>>>

ரிசர்வ் வங்கி 5 ஆயிரம் ரூபாய் நோட்டுகளை வெளியிடப்போவதாக கூறப்படும் தகவல் தவறானது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

கடந்த ஓர் ஆண்டில் 21 லட்சத்திற்கும் அதிகமான போலி தொலைபேசி எண்கள் மற்றும் ஒரு லட்சம் நிறுவனங்களுக்கு எதிராக இந்திய தொலைதொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் நடவடிக்கை எடுத்துள்ளது.

<<<<>>>>

திருவண்ணாமலை மாவட்டம் தச்சம்பட்டு அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவர்களுக்கு மாநில அமைச்சர் திரு. எ.வ. வேலு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார்.

<<<<>>>>

திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு அருகே மருதா நதி அணையின் வடக்கு மற்றும் தெற்கு வாய்க்கால்களை சீரமைக்கும் பணியை அமைச்சர் திரு. பெரியசாமி தொடங்கி வைத்தார்.

<<<<>>>>

நாமக்கல் அருகே ஏ.கே.சமுத்திரத்தில் கல்விக் கடன் வழங்கும் முகாம் நாளை நடைபெற உள்ளதாக ஆட்சியர் திருமதி துர்கா மூர்த்தி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

உதகை அருகே மாவனல்லா கிராமத்தில் புலி தாக்கியதில் பெண் ஒருவர் உயிரிழந்தார்.

<<<<>>>>

நெல்லை பாளையங்கோட்டையில் பிரசித்தி பெற்ற தூய சவேரியர் பேராலயத்தின் ஆண்டு பெருவிழா நேற்று மாலை கொடியேற்றத்துடன் தொடங்கியது.

<<<<>>>>

ஈரோடு மாவட்டம் பவானி அருகே உணவகம் ஒன்றில் விற்பனை செய்யப்பட்ட சிக்கன் பர்கரில் கம்பி இருந்ததையடுத்து, உணவுப் பாதுகாப்புத்துறை அதிகாரிகள் அந்த உணவகத்திற்கு சீல் வைத்தனர்.

<<<<>>>>

சென்னை ஐ.ஐ.டி. வளாகத்தை வரும் ஜனவரி மாதம் 2ஆம் தேதி முதல் 4ஆம் தேதி வரை பொதுமக்கள், மாணவர்கள் உள்ளிட்டோர் பார்வையிடலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

Deaflympics போட்டியில் இந்தியாவின் Pranjali Prashanth Dhumal தங்கப் பதக்கம் வென்றார்.

ஜப்பானின் டோக்கியோவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் துப்பாக்கி சுடும் 25 மீட்டர் பிஸ்டல் பிரிவில் அவர் இப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.

<<<<>>>>

உலக இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியின் ஆடவர் 19 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

ருமேனியாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா சீன தைபேயை வென்றது.

<<<<>>>>

அஸ்லான் ஷா கோப்பைக்கான ஹாக்கிப் போட்டியில் இந்தியா - பெல்ஜியம் அணிகளுக்கு இடையேயான ஆட்டம் இன்று நடைபெறுகிறது.

மலேசியாவில் நேற்று மழை காரணமாக ஒத்திவைக்கப்பட்ட இந்த ஆட்டம் இன்று நடைபெறுகிறது.

<<<<>>>>